பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 23 புதன்கிழமை (06-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 101

## கிழக்கு ராணுவ நடவடிக்கை திங்கள் முதல் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 6

கிழக்கில் செங்கலடி — பதுளை வீதியில் கடந்த வெள்ளி முதல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை திங்கட்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது கொடுவாமடு, பூமாஞ்சோலை, தம்பானா வெளி, மகிழவெட்டுவான் ஆகிய பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிரித்திரன் சுந்தர் மறைவு தமிழீழத்துக்கு பேரிழப்பு!

### விடுதலைப் புலிகள் அனுதாபம்

சாவகச்சேரி, மார்ச் 6

சமூக சிந்தனையாளரும், கேலிச் சித்திர ஓவியரும் சிரித்திரன் ஆசிரியருமான சி. சிவஞானசுந்தரம் (சுந்தர்) அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து நாம் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரது மறைவு தமிழீழ கலை, இலக்கியத் துறைக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும்.

இவ்வாறு ''மாமனிதர்'' சி. சிவஞானசுந்தரத்தின் மறைவையொட்டி விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திரு சுந்தர் அவர்கள் இளம் பராயம் தொட்டே கலை, இலக்கியத்துறையில் மிகவும் ஈடுபாடு உடையவராக விளங்கினார் இந்தியாவில் பம்பாய் நகரில் கட்டடக்கலை பயின்றுகொண்டிருந்த போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை என்று எதுவுமில்லையாம்

# அரசின் தீர்வுத் திட்டத்தை பிக்குமார் நிராகரித்தனர்!

## நேற்றைய கூட்டத்தில் கண்டனம்

கொழும்பு, மார்ச் 9

சந்திரிகா அரசாங்கம் முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை பௌத்த பிக்குமார் முற்றாக நிராகரித்துள்ளனர்.

இனப் பிரச்சினை என்று இந்த நாட்டில் எதுவுமில்லை. அரசின் தீர்வுத்திட்டம் நாட்டைப் பிளவுபடுத்தும் — என்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று நடந்த பௌத்த பிக்குகள் கூட்டத்தில் பலரும் கண்டனம் தெரிவித்தனர்,

நேற்றைய கூட்டத்தில் 2,500 க்கும் அதிகமான பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர். பௌத்த பிக்குகளின் 30 அமைப்புகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த தேரர், வல்பொல ராகுல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருத்தம் ஏற்கப்படாவிடில் ஸ்ரீமணியின் கட்சி எதிர்க்கும்

கொழும்பு, மார்ச் 6

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து தம்மால் சமர்பிக்கப்படும் திருத்தங்கள் கவனிக்கப்படாவிட்டால் அரசின் யோசனைகளுக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் அணி) அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமணி அத்துலத்முதலியின் தலைமையிலான இந்த முன்னணி சமர்பித்துள்ள திருத்தங்களால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டங்களில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. (இ-3-6)

## தெரிவுக் குழுவிடம் மகாசங்கமும் ஆலோசனைகளை சமர்ப்பிக்கும்

### அஸ்கிரிய பீடாதிபதி தகவல்

கொழும்பு, மார்ச் 6

அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகள் குறித்து மகா சங்கம் எடுத்துள்ள தீர்மானம், நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்·

இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய பலிப்பானே ஸ்ரீசந்திரானந்த தேரர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். இதற்காக ஒரு குழுவும் அங்கு தெரிவு செய்யப்பட்டது.

அரசியல் தீர்வு யோசனைகளில் ஏற்றுக்கொள்ள முடியாத பல அம்சங்கள் இருப்பதால் அரசாங்கம் இந்த யோசனைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இந்த கூட்டத்தின் நோக்கம் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவது அல்ல என்று தெரிவித்த அவர், நாட்டின் சகல முக்கிய விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரி

(4 ஆம்பக்கம் பார்க்க)

## தமிழ்சங்க கொடிக்கு பல்கலைக்கழகத்தில் தடை

கொழும்பு, மார்ச். 6

நேற்று முன்தினம் நடந்த பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் சங்க கலை விழாவில், தமிழ்ச் சங்க கொடியை ஏற்ற பல்கலைக்கழக நிர்வாகம் தடை விதித்துவிட்டது.

தமிழ்ச் சங்கத்தின் கலை விழாவும், இளம்கதிர் சஞ்சிகை வெளியீடும் நடைபெற்றபோதே தமிழ்ச் சங்க கொடியையும் ஏற்ற ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் பல்கலைக்கழக நிர்வாகம் தலையிட்டு இதனைத் தடுத்து விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த தடை நடவடிக்கையை கண்டித்துள்ளது. (இ-3)

# 'கிபிர்' சுப்பசொனிக் விமானங்கள் பரந்தனில் நேற்று குண்டு வீச்சு!

சாவகச்சேரி, மார்ச் 6

ஸ்ரீலங்கா விமானப்படை புதிதாகக் கொள்வனவு செய்த 'கிபிர்' சுப்பசொனிக் குண்டு வீச்சு விமானங்கள் பரந்தன் பகுதியில் நேற்றுக் காலை குண்டு வீச்சு நடத்தின.

நேற்றுக் காலை 8.25 மணியளவில் கிளிநொச்சி வான் பரப்பில் நுழைந்த இஸ்ரேல் தயாரிப்பு 'கிபிர்' சுப்பசொனிக் விமானங்கள் பல தடவைகள் கிளிநொச்சி நகரை உள்ளடக்கிய பகுதிகளை வட்டமிட்ட பின்னர் இரண்டு தடவைகள் குண்டுகளை வீசின.

முன்னர் இராணுவத் தாக்குதல்களால் சேதமடைந்த நிலையில் கைவிடப்பட்ட கட்டடங்கள் பல இந்த குண்டு வீச்சினால் சேதமடைந்தன.

இந்த இரு குண்டு வீச்சு விமானங்களும் பேரிரைச்சலுடன் வட்டமிட்டபோது கிளிநொச்சி நகரம், பஸ் நிலையம், மருத்துவமனை,

4 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கியில் தங்கம் களவாடிய சிப்பாய்!

### தற்போது வடக்கில் கடமை

கொழும்பு, மார்ச் 6

ஜனவரி 31 ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கி குண்டு வெடிப்பின் போது தங்கத்தையும், பணத்தையும் களவாடிய சிப்பாய் ஒருவர் அவற்றை தனது வீட்டில் கொடுத்துவிட்டு வடக்கு படை முகாமில் தற்போது பணியாற்றுகிறார் என 'தினமின' பத்திரிகை நேற்று செய்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிச் சந்தேக நபர்கள் சிறையிலிருந்து தப்பினர்!

பலத்த பாதுகாப்புடனான திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து இரு விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் கடமை மாறும் போது இவ்விருவரும் தப்பிவிட்டனர் என்று 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறைக் கூடத்தின் இரு இரும்பு கம்பிகளை வெட்டி அவர்கள் தப்பி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

முதிரையிலான சோக்கேஸ்கள், சாப்பாட்டு மேசைகள், கதிரைகள், கட்டில்கள் (புதிய மெத்தையுடன்), சிங்கர் தையல் மெசின்கள், தெளி கருவிகள், மின்மோட்டர்கள், பால் மாடு கன்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. சீவரட்ணம், மோகனதாஸ்சனசமூக நிலைய அருகாமை, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. (40972)

## O/L மாணவர்களே!

நவமோகனின் ஒத்த எதிர்க் கருத்து 4000 சொற்கள் கொண்டது. [பின்னிணைப்புடன்] விலை 37/-. கேட்டு வாங்குங்கள். பூபாலசிங்கம்- சாவகச்சேரி, அம்பிகா-பருத்தித்துறை, லக்சுமி, சிதம்பரப்பிள்ளை - நெல்லியடி. (40973)

## தவறிவிட்டது

வி. நீலேஸ்வரி ஆகிய எனது 565110535V இலக்க தேசிய அடையாள அட்டை வல்லிபுரக் கோவிலில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (40324)

மன்னார் ஆஸ்பத்திரியில் தாதியாக பணிபுரியும் செல்வி ஆனாள் அந்தோனிமுத்து என்பவருடைய உடுப்புப் பை (சிவப்பு, நீல நிறம்) கிளாலி பஸ்ஸில் நேற்று முன்தினமிரவு காணாமல் போய்விட்டது. எடுத்தவர் மந்திகை ஆஸ்பத்திரி தாதியர் பணிமனையில் ஒப்படைக்கவும். (40977)

## திருமண சேவை

கே. கே. எஸ். றோட், மல்லாகம், வளர்மதி இல்லத்தில் இயங்கி வந்த துர்க்கா திருமண சேவை தற்பொழுது கந்த உடையார் லேன், பருத்தித்துறையில் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (40323)

## தேவை

கிளிநொச்சி யாழ். வீதியில் உள்ள ஆங்கில வைத்திய சாலைக்கு அனுபவமுள்ள அல்லது பயிற்சி பெற விரும்பும் பெண் தாதிமார்கள் தேவை. C/o No. 1, உதயன் கிளிநொச்சிக் கிளை நிலையம், Y.M.C.A. கட்டடம், கிளிநொச்சி. (சி-4085)

கைதடியில் இயங்கவுள்ள மருத்துவபீடத்தின் மாணவிகள் இருவருக்கு தங்கியிருந்து படிப்பதற்கு (சாப்பாட்டுடன்) நுணாவில் சந்திக்கு அருகாமையில் அறை தேவை. விண்ணப்பிக்கவும்: ''எபனேஸர்'' கற்கோவளம், பருத்தித்துறை. (40898)

## ஆனந்தம் சீயாக்காய்

சித்தமருத்துவ ஆலோசனையின்படி மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் கூந்தல் அழகியுடனும், கோபுர சின்னத்துடனும் வந்தது. இப்போ கோபுர சின்னத்துடன் மட்டும் வருகிறது. தற்போதைய சீதோஷ்ண நிலைக் கேற்றவாறு சிரசின் தனித்துவத்தைப் பேணுமுகமாக தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். கேட்டுவாங்கி பாவித்து பலன்பெறுவீர்களாக. (40967)

## வாடகைக்கு

சாவகச்சேரி நவீன சந்தையில் இருந்து டச் வீதியில் 80 யார் தூரத்துக்குள் கடைக் கட்டடம் வாடகைக்குண்டு. 'சுஷாந்தீஸ்' ஆங்கிலக் கல்வி நிலையம், 23, டச்வீதி, சாவகச்சேரி. (40907)

## கருத்தரங்கு

ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர்களுக்கான ஐந்து நாள் வதிவிடக் கருத்தரங்கு இம்மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை வவுனியா கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும்.

மேற்படி வதிவிடக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறும் வலயம் 1, வலயம் 2ஐச் சேர்ந்த அனைத்து ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான முன் ஆயத்தங்களுக்காக சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ)

## திருத்தப்பட்டன

சாவகச்சேரி வைத்தியசாலையில் பழுதடைந்த இரு ஜெனரேட்டர்களும் திருத்தப்பட்டு நேற்று இயங்க ஆரம்பித்தன.

கடந்த சில நாள்களாக பழுதடைந்த நிலையில் இருந்த இந்த ஜெனரேட்டர்களை மத்திய மின்சார சபையினர் திருத்தி மீண்டும் இயங்கச் செய்தனர். (இ-3)

## சட்டத்தரணி செயலக இடமாற்றம்

பழைய முகவரி:-

கதிரேசு சிவசுப்பிரமணியம் B.A., L.L.B.
சட்டத்தரணி, நொத்தாரிஸ்,
ஊரெழு/ உரும்பிராய்/ உடுவில்.

வழக்குக் கட்சிக்காரர் தொடர்பு கொள்ள வேண்டிய புதிய முகவரி:-

வதிவிடம்
மே/ பா. திரு.க. குருவர்,
இல. 179, டி 10,
உருத்திரபுரம்.

செயலகம்
மே/பா. திரு.சி. கனகநாதன்,
இல. 1037 கோணேசபதி,
திருநகர் தெற்கு.

(40472)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 14 — 10 — 1921



மறைவு: 06 — 02 — 1996

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

### திருமதி சர்வபாக்கியம்

மாவடி நடராசா

நாளை (07 - 03 - 96) வியாழக்கிழமை விஸ்வமடுவில் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறபிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
- குடும்பத்தினர்

40960)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

### திருமதி கனகசபை சின்னத்தங்கம்

(மாலி சந்தை, துன்னாலை தெற்கு, கரவெட்டி)

இறப்பு: 05 - 02 - 1996

''உனதுடல் மறைந்தாலும் உளதரிய உள்ளம்பு
எம்மனதிடையே சுடர் விட்டெரியும்''

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவும், பாசமும் என்றும் எங்களை விட்டு அகலா. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:

வே. ஜெயராசா சரஸ்வதி
குடும்பத்தினர்

பூதவராயர் கோயில்,
மாலி சந்தை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(40328)

## க. பொ. த (சா/த) பரீட்சை - 1995
## ஆண்டு 5
## புலமைப் பரிசிற் பரீட்சை - 1995

மேற்படி பரீட்சைகளுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்து, தற்போது இடம்பெயர்ந்து, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தங்கியுள்ள பரீட்சார்த்திகள் தங்கள் விவரங்களைப் பின்வரும் பாடசாலைகளில் 09-03-96 ஆம் திகதிக்கு முன்னர் தவறாது பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

### பதிவு செய்யும் பாடசாலைகள்

1. கிளி/மத்திய கல்லூரி
2. கிளி/முரசுமோட்டை முருகானந்தா ம. வி.
3. கிளி/இந்துக் கல்லூரி
4. கிளி/வட்டக்கச்சி ம.வி.
5. கிளி/பூநகரி ம. வி. (ஜெயபுரம்)
6. கிளி/முழங்காவில் ம.வி.
7. மு/மல்லாவி மத்திய கல்லூரி
8. மு/மாங்குளம் ம. வி.
9. மு/புதுக்குடியிருப்பு ம. வி.
10. மு/ஒட்டிசுட்டான் ம.வி.
11. மு/விசுவமடு ம. வி.
12. மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி.

மேற்படி பரீட்சைகளை ஒழுங்கு செய்து நடத்துவதற்கு பரீட்சார்த்திகளின் பதிவுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

கல்விப் பணிப்பாளர்கள்.
கிளிநொச்சி/முல்லைத்தீவு

(சி/4087)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கதிரவேலு

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மமா கதிரவேலு அவர்கள் 04 - 03 - 96 திங்கட்கிழமை காலமானார். இவர் வீ. கதிரவேலுவின் மனைவியும், சண்முகநாதன் (U. K), காலஞ்சென்ற கணேஸ்வரன் மற்றும் ரதிதேவி, சிவபாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயகௌரி (U.K), ஜெயச்ந்திரவதனி, லோகநாதன், கோகுலானந்தன் ஆகியோரின் மாமியாரும், சங்கர், ராகுலன், ஸ்ரீகரன், ஸ்ரீராகவன், தனஞ்செயன், தனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (05 - 03 -96) காலை 10. 00 மணியளவில் 14, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் நடைபெற்றன. உற்றார், உறவினர் நண், பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
வி. லோகநாதன்
(மருமகன்)

(சி-4086)

யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் உப அதிபராக நற்பணிபுரிந்து
ஓய்வு பெற்ற உயர்திரு. கந்தையா சிவராசா அவர்களுக்கு

# சேவை நலன் பாராட்டுக்கள்

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாளின் (பேச்சியம்பாள்) அருள் அமுதத்தை ஏற்றுத் திளைத்து மகிழ்ந்தவர் திரு. க. சிவராசா அவர்கள். இதன் பயனாகவே என்றும் இன்முகத்துடன் நாடுவோரை வரவேற்பதிலும், உதவிகள் புரிவதிலும், ஆசிரியராக, உப அதிபராக கல்வியிலும், கடமையுணர்விலும் வள்ளுவர் நெறியில் ஈடுபாடு கொண்டவராக விளங்கி; முற்பத்தியாறு வருடம் செயலாற்றிய இவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் எமது பாடசாலைக்கும், எமது சமுகத்தின் முறைசார்ந்த, முறைசாராக் கல்வி வளர்ச்சிக்கும் தொடர்ந்து இப் பெருந்தகை ஆற்றும் தன் நலம் கருதாப் பணிகள் தொடரும் என்ற நம்பிக்கையோடு, சகல யோகமும் பெற்று பெரு வாழ்வு வாழ எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமாளை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(40897) 06-03-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மொட்டிலே கருகி விடும்!

இனப் பிரச்சினைக்கான அரசின் தீர்வுத் திட்டம்— சட்ட ஆவணம் — நாளை ஏழாம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக் கப்படுகிறது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு அக்கறை உண்டு என்று காட்டுவதற்காக — அரசியல் தீர்வைக் கொண்டு வருவதில் நாட்டம் உண்டு என்று காட்டுவதற்காக — அரசு இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

தான் நினைத்தவாறு அன்றி, நடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் கருத்து இணக்கத்துடன் ஒரு தீர்வைக் கொண்டுவரும் முயற்சியே நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்று கூறப்படுகிறது

அரசாங்கத்துக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாததால், அரசு ஏனைய கட்சிகளை அரவணைத்துக் கொண்டு தீர்வு ஒன்றைக் காண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதே உண்மை.

மங்கள முனசிங்கா தெரிவுக் குழுவுக்கும், அதற்கு முன்னர் நடைபெற்ற அனைத்துக்கட்சி மாநாடு, அரசியல் கட்சிகள் மாநாடு ஆகியவற்றுக்கும் முன்னர் நேர்ந்த கதியே இந்தத் தெரிவுக் குழுவுக்கும் ஏற்படும் என்பது இப்போதே தெரிந்த ஒன்று.

அதற்கான சகல அறிகுறிகளும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன.

அரசின் சட்ட ஆவணம் குறித்து அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையிலேயே கருத்து வேற்றுமை நிலவுகிறது. சட்ட ஆவணத்தின் முக்கிய அம்சங்களில் பல துருவங்களாக அவை முரண்பட்டு நிற்கின்றன. ஒற்றையாட்சி முறையை மாற்றக் கூடாது என்று ஸ்ரீமணி அத்துலத்முதலி அடம்பிடிப்பது அத்தகைய எதிரும் புதிருமான காட்சிகளில் ஒன்று.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்த வரையிலும் அதே நிலைதான். ஒற்றையாட்சியை நீக்குதல் உட்பட்ட பல அம்சங்களை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கிறது. சட்ட ஆவணத்தில் உள்ள கனதியை செறிவு குறைந்ததாக்க வேண்டும் என்கிறது. தான் திருத்தங்களைக் கொண்டு வரப்போவதாகக் கூறுகிறது.

தமிழ்க் கட்சிகள் சட்ட ஆவணத்தில் உள்ளதைவிட அதிக அதிகாரங்களையும், வடக்கு - கிழக்கு இணைப்பையும் எதிர்பார்க்கின்றன. அதிகாரப் பகிர்வு குறித்து தமிழ்-முஸ்லிம் கட்சிகளிடையே ஓர் இணக்கப்பாடில்லை.

நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் அரசின் தீர்வுத் திட்டத்துக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. சிங்கள அரசியலை நிர்ணயிக்கும் பிரதான அங்கமான பௌத்த மகா சங்கம் தீர்வை முழு மூச்சுடன் எதிர்க்கிறது.

சிங்கள - பௌத்த பேரினவாதிகளும் அதே நிலைப் பாட்டுடன் மூர்க்கத்தனமாக நிற்கிறார்கள்.

இத்தனை முரண்பாடுகள், எதிர்ப்புகளின் மத்தியில் தீர்வு ஒன்றைக் காண இயலும் என்பது வெறும் வாய் வேதாந்தமாகவே முடியும்.

தமிழர் தரப்பில் விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விட்டு, இனப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான எந்தத் தீர்வையும் காணமுடியாது என்ற யதார்த்த நிலையை புறக்கணித்து மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி —

நாடாளுமன்றத்துக்கு அகமும் புறமும் உள்ள கடும் வரட்சியால் மொட்டிலேயே கருகிவிடும்.இதில்ஐயமில்லை!

# வாகரையில் துறைமுகம் நிறுவ புலிகள் திட்டமாம்

## கடற்படைப் பலம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, மார்ச் 6

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் —

அவர்களின் பலம் அங்கு வலுவடைந்து வருவதாகவும் —''சண்டே லீடர்'' தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்களின் பிடியை மேலும் விஸ்தரிப்பதற்காக—

வாகரையில் துறைமுகம் ஒன்றை அமைக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று தெரியவந்திருப்பதாக அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகள் வடமராட்சியில் உள்ள தமது கடற்படைத் தளங்களில் சிலவற்றைக் கிழக்குக்கு மாற்றுவதாகவும், அங்கு கடற் புலிகள் பலத்தை அதிகரிப்பதாகவும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## காணாமற்போனோர் விசாரணை வவுனியாவில்

### கிளிநொச்சியில் 61 முறைப்பாடுகள்

கிளிநொச்சி, மார்ச் 5

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை இம்மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

இக்காலப் பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல்போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் பற்றி முறைப்பாடு செய்தவர்கள், இம்மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை வவுனியா மாவட்டத்தில் நடைபெற இருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்குத் தோற்றுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி விசாரணைக் குழு முன் தோற்றுவதற்குச் செல்லும் முறைப்பாட்டாளர்கள் தமது தேசிய அடையாள அட்டையைத் தவறாது தம்முடன் எடுத்துச் செல்லவேண்டும். பிரயாணத்துக்கு வேண்டிய சிபார்சுக் கடிதம் தேவையானவர்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து காணமற்போன மற்றும் கடத்தப்பட்டவர்கள் பற்றி 61 பேரின் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ-124)

## திரைப்பட அரங்குகளை மூடி விடுவதற்கு முடிவு

சகல திரைப்பட அரங்குகளையும் காலவரையறையின்றி மூடுவதென திரைப்பட அரங்கு உரிமையாளர்கள் நேற்று முடிவு செய்தனர்.

இந்த திரையரங்குகள் நஷ்டத்தில் இயங்குவதால் அவற்றை மூடவேண்டி ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு 7 கோடி பேர் திரைப்படம் பார்த்தனர்.

இப்போது இந்த எண்ணிக்கை 3 கோடியாக குறைந்துள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

(இ-3)

## விஜயகுமாரதுங்கா கொலை: 15 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

விஜயகுமாரதுங்காவை கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்த 5 சந்தேகநபர்களும், படுகொலை சூழ்ச்சியை மூடி மறைப்பதற்கு திட்டம் வகுத்த 3 ஓய்வு பெற்ற உயர் பொலீஸ் அதிகாரிகளும் தற்போது சேவையில் உள்ள 7 பொலீஸ் உயர் அதிகாரிகளும் விரைவில் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள்.

இந்த 15 பேருக்கும் எதிராக குற்றவியல் வழக்கு தொடர்வது பற்றி பரிசீலனை செய்யும்படி சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுவதாக உயர் மட்ட நீதித்துறை நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

படுகொலைசூழ்ச்சியில் பங்கு கொண்டதுக்காக இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

(இ-3)

## இடம்பெயர்ந்தோரால் பாடசாலையில் நெருக்கடி

கிளிநொச்சி ,மார்ச் 6

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்து பாடசாலைகளில் தங்கியிருப்பதால் கிளிநொச்கிப் பகுதிப் பாடசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பமானதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் ஆரம்ப வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அத்தோடு இந்த ஆண்டு உயர்தரவகுப்புப் பரீட்சைஎழுதும் மாணவர்களும் பெரும் எண்ணிக்கையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களுக்கான வகுப்புக்களை நடத்துவதற்குப் போதிய இட வசதிகள் பாடசாலைகளில் தற்பொழுது இல்லாததால் வகுப்புக்களை நடத்துவது சிரமத்துக்குள்ளாகி இருக்கிறது.

இப்பாடசாலைகளில் தங்கி இருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் தாம் இருக்கும் இடங்களை விட்டுத் தந்தால் வகுப்புக்களை ஒழுங்காக நடத்துவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகள் அனைத்தும் இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பமானது தெரிந்ததே.

(இ-124)

## திருமலை குண்டுவெடிப்பில் இருவர் காயம்

கொழும்பு, மார்ச் 5

திருகோணமலையில் பள்ளிக்குடியிருப்பில் குண்டு ஒன்று வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (இ-3)

## சமயக் கல்விக்கு 10 ஆயிரம் ஆசிரியர்கள்

கொழும்பு, மார்ச் 6

பாடசாலை மட்டத்தில் சமயக் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசாங்கம் சமயக் கல்விப் போதனைக்கென பிரத்தியேகமாக ஆசிரியர்களை திரட்டவிருக்கிறது.

போட்டிப் பரீட்சை மூலம் நாடு முழுவதும் 10 ஆயிரம் ஆசிரியர்கள் சேர்க்கப்படவிருக்கின்றனர்.

இந்த ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை ஏப்ரலில் நடைபெறும். (இ-3)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கேட்டுள்ளது.

★ மற்றிக்டா சண்முகநாதன்—இல 36/08, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ கிறிஸ்தோபர் மாசிலாமணி —இல. 158/02, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ ஜெரோம் றேமன் — இல 163, பீச்றோட், பாசையூர்.

★ பொ. சண்முகலிங்கம் — இல 44, இலந்தைக் குளம் வீதி, அரியாலை.

★ தங்கம்மா கணபதிப்பிள்ளை — இல. 06, 3 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

★ மகாலிங்கம் — இல. 224, நாவலர் வீதி, யாழ்ப் பாணம்.

★ கிரேஸ்மலர் கந்தையா — இல. 146, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ சாரதாதேவி இலங்கைநாதன் — கோப்பாய் வடக்கு.

★ செல்லையா துரைராஜா — 3ஆம்கட்டை,ஆனைக் கோட்டை.

★ பா. இராமநாதன்— மே/பா வி. பாக்கியநாதன், சிவன்கோவிலடி, வட்டு மேற்கு.

★ தாமோதரம்பிள்ளை சிவராசா — இலங்கை வங்கி, கே. கே. எஸ். வீதி, மானிப்பாய்.

★ ராஜதுரை புவனனேஸ்வரன் (புவனம்) — பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு.

★ கந்தையா சொக்கலிங்கம்— வங்களா ஒழுங்கை, மல்லாகம்.

★ மனோரஞ்சிதம் கிருஷ்ணபிள்ளை — சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.

★ தாவகேஸ்வரி பாலசந்திரன் அல்லது ரத்தினசிங்கம் — அல்லாரை வீதி, அல்லாரை, மீசாலை.

★ ஜோசப் ஜேசுதாசன் — மே/பா சிறில் ஜேசப், அல்லாரை வடக்கு, அல்லாரை.

★ சின்னத்தம்பி சிவராசா அல்லது சரஸ்வதி சிவராசா — பாலையடி பிள்ளையார் வீதி, மீசாலை கிழக்கு.

★ கனகு சின்னராசா — மே/பா மார்க்கண்டு, அம்மன் கோவிலடி, மட்டுவில் கிழக்கு.

★ குணபாலன் — மே/பா இளையதம்பி செல்வரட்ணம், கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

★ பொன்னம்பலம் பொன்னுத்துரை — கச்சாய் தெற்கு கொடிகாமம்.

★ லட்சுமிப்பிள்ளை அல்லது கந்தர் நடராசா — மீசாலை தெற்கு.

★ வேலாயுதம் பாலசிங்கம் — மே/பா மு. மகேந்திரன், கும்பாவெளி, மந்துவில், கொடிகாமம்.

★ நாகம்மா நடேசு — மே/பா பொன்னுத்துரை, சிவன் கோவில் வீதி, மட்டுவில் தெற்கு.

★ வீரகத்தி கந்தையா — மே/பா வி. சதாசிவம், மீசாலை வடக்கு

★ நாகம்மா சீனியர் — மே/பா மலர்சூடி, மீசாலை வடக்கு.

★ சற்குணதேவி இராசையா அல்லது கந்தையா மாணிக்கம் — மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

★ நீற்றா அல்பிரட் — வேம்பிராய் வீதி, மந்துவில்.

★ மு. தம்பிராஜா — மே/பா கே. தணிகாசலம், மீசாலை வடக்கு.

★ M. சிவசுப்பிரமணியம் — மே/பா ஜெயதேவி சிவசுப்பிரமணியம், வேம்பிராய்.

★ ஜெகநாதன் அம்பலவாணர் — மே/பா ஆறுமுகம் மனோகரன், வேம்பிராய், வரணிறோட், வரணி கிழக்கு, மந்துவில்.

★ சிவகாமி வன்னி — மே/பா கமலசாமி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

★ தம்பிப்பிள்ளை ஜெயசிங்கம்—மே/பா எஸ். சீதாதேவி, தங்கம் இல்லம்,டச்சு றோட், மீசாலை மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய வங்கி...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

பனாகொடை இராணுவ முகாமில் குண்டு செயல் இழக்கும் பிரிவில் பணியாற்றிய இந்த சிப்பாய் மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் போது அங்கு சென்றிருந்தார் என்றும்—

வங்கியில் காணாமல் போயுள்ள தங்கத்தில் ஒரு லட்சத்து 37 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கத்தையும், கத்தை கத்தையாக ஆயிரம் ரூபா நோட்டுக்களையும் இவர் எடுத்துச் சென்று குருநாகலில் உள்ள தனது வீட்டில் கொடுத்தார் என்றும் — தற்போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக குருநாகல் பொலீஸார் 4 சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர் என்று 'தினமின' பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது. (இ-3-6)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக 3ஆம் வருட பௌதிகவியல் துறை மாணவியான செல்வி நிலாவரசியின் அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி திருநாவுக்கரசு

அவர்களின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட பௌதிகவியல் துறை மாணவர்கள்.**

(40909)

## மரண அறிவித்தல்கள்

### செவ்வந்திநாதஐயர் ஜானகி அம்மா

கோப்பாயைச் சேர்ந்தவரும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஜானகி அம்மா அவர்கள் 03-03-96 ஞாயிறு பிற்பகல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செவ்வந்திநாத ஐயரின் அன்பு மனைவியும், பரமானந்தக் குருக்கள், அமிர்தாம்பிகை (கொழும்பு) காலஞ்சென்ற குமாரசாமிசர்மா ஆகியோரின் அன்புத்தாயாரும், பங்கஜவல்லி, சிற்சபேசக்குருக்கள் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஷ் (கொழும்பு), வாசுதேவன், சனாதனன், அபர்ணா, அகிலா, ஸ்ரீவித்தியா, ஸ்ரீ வஸ்தலா, சங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (03-03-96) ஞாயிறு கொழும்பில் நடைபெற்றன இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமானந்தக்குருக்கள் வாசுதேவன்
(பேரன்)

கல்வயல்
சாவகச்சேரி.

(40978)

### மகேந்திரன் பிறேமானந்

கொழும்புத்துறை 26/2A 3, ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மகேந்திரம் பவளம் தம்பதிகளின் புதல்வன் பிறேமானந் (பிறேம்) 03–03–96 ஆம் திகதி அகால மரணமடைந்தார்.

இவர் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய பழைய மாணவராவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-03-96 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு; தற்பொழுது வசிக்கும் கைதடி, நாவற்குளி தெற்கில் (கோயிலாக் கண்டி) நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. க. மகேந்திரம்
(தகப்பன்)

(40913)

### இராசையா கமலேந்திரம்

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த இராசையா கமலேந்திரம் (கமலம் ஸ்ரோர்ஸ், சுதுமலை) நேற்று (05-03-96) அதிகாலை சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசையா — பார்வதம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலராசாவின் சகோதரரும், நாகபூசணியின் அன்புக் கணவரும், சிவகுமார் (கனடா), உதயகுமார், கமல்ராணி, (கனடா), ஜெயக்குமார் (சுவிஸ்), வசந்தகுமார் (சுவிஸ்), கமலரஞ்சினி (கனடா), கல்யாணி (இ.ப.க, கல்லூரி, வவுனியா), கலைவாணி, கலாவதி (தொழில் நுட்பக் கல்லூரி H. N. D. A. முதலாம் வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லை நடராசாவின் சிறிய தந்தையும், வினோதினி, தவராஜசிங்கம், ஏஞ்சல்) விஜயகோபால் ஆகியோரின் மாமனாரும், திரு. திருமதி செல்லத்துரையின் மருமகனும், ஏகாம்பரம், பத்மலோஜினி ஆகியோரின் மைத்துனரும், தர்மகுலசிங்கம், ராணி ஆகியோரின் சகலனும், யாழவன், ஆதவன், அர்ச்சனா, தபீத்தா ஆகியோரின் பாட்டனும், காலஞ்சென்ற த. அருமைத்துரையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று(06-03-96) புதன்கிழமை 2 மணிக்கு ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க. உதயகுமார்
(மகன்)

முகவரி:–
ஐஸ் பக்ரறி றோட்,
கற்கோவளம்,
பருத்தித் துறை.

(40325)

# அரசசார்பற்ற நிறுவனங்களில் திருடுவோர் மீது கடும் நடவடிக்கை

சாவகச்சேரி, மார்ச் 6

அரச சார்பற்ற நிறுவனங்களில் திருடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக வலிகாமப் பிரதேசத்திலிருந்து ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பிலும், எமது ஏனைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களின் உணவு, உடை, மருத்துவம் உட்பட பல்வேறுபட்ட அத்தியாவசிய தேவைகளை இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனித்து தம்மால் முடிந்தவரை மனிதாபிமான அடிப்படையில் மகத்தான சேவையாற்றி வருகின்றன.

மிகவும் மனிதநேயத்துடன் செயற்படும் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசின் சொல்லொணா இடையூறுகளுக்கு மத்தியில் தமது பணியை மேற்கொண்டு வருகின்றன.

இன்றைய நிலையில் இவர்கள் மேற்கொள்ளும் பணியை எமது தேசம் ஒருபோதும் மறக்கமாட்டாது. எமது வரலாற்றில் மிகவும் நன்றிக்கடன் உள்ளவர்களாக இருப்போம்.

ஆனால் இவற்றை உணராத சில சமூக விரோத சக்திகள் எம். எஸ். எவ், கெயர், யு. என். எச். சி. ஆர். போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான சில பொருள்களைக் களவாடியுள்ளன. இப்பொருள்கள் இராணுவ நடவடிக்கையின் காரணமாக இடம் பெயர்ந்து அல்லலுறும் எமது மக்களுக்கென கொண்டுவரப்பட்டவையே ஆகும். இச்செயலை நாம் மக்கள் விரோத செயலாகவே பார்க்கின்றோம். இதனால் பாதிக்கப்படுபவர்கள் எமது மக்களே ஆவர்.

இவ்வாறான மக்கள் விரோத குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வீரச்சாவு

கடந்த 27 ஆம் திகதி அரியகுண்டான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் விழுப்புண் அடைந்திருந்த மேஜர் டினேஸ் அல்லது நளன் (சின்னத்தம்பி ஜெயகரன் — மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார். (இ-3)

## இறுதி அஞ்சலி

★ மேஜர் ரஞ்சன் (தங்கவேலு கேதீஸ்வரன்) கீரிமலை

★ வீரவேங்கை தமிழ்வாணன் (இராமச்சந்திரன் சிவகுமார்) கண்டி.

★ லெப். சில்மன் (ராஜேந்திரன் டொமினிக் கமல்) திருமலை.

★ கப்டன் இலக்கியன் (மரியதாஸ் ஆசைப்பிள்ளை) அரியாலை மேற்கு.

★ லெப். சுடர்மணி (சிங்கராசா சிறிஸ்காந்தன்) பண்டத்தரிப்பு.

★ 2 ஆம் லெப். உதயன் (செல்லையா செந்தில்நாதன்) திருமலை.

★ வீரவேங்கை இந்திரன் (ஆழ்வாப்பிள்ளை பாலச்சந்திரன்) மிருசுவில் ஆகிய மாவீரருடைய இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று 6 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு மீசாலை ஸ்ரீவிக்கினேஸ்வரா கல்லூரியில் நடைபெறும் என மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது. (இ)

## 'கிபிர்'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தை ஆகிய பகுதிகளில் திரண்டிருந்த மக்கள் சிதறி ஓடினர்.

அகதி முகாம்களில் வாழ்ந்த மக்கள் காப்பிடங்களைத் தேடி ஓடினர். ஒரு குண்டு காலை 8.35 மணிக்கும், மற்றைய குண்டு 8 40 மணிக்கும் வீசப்பட்டன. (இ-7)

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நடவடிக்கைக்கு விமானப்படை ஹெலிகள் உதவியதாகவும், கவச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும்—

விடுதலைப் புலிகளின் எதுவித எதிர்த் தாக்குதலும் இன்றி படையினர் முன்னேறியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தெரிவுக்குழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்க மகா சங்கம் விரும்புகிறது என்று கூறினார்.

அமரபுர மகாசபையின் சார்பில் உரையாற்றிய தலலே தம்மானந்த மகாநாயக்க தேரர், இந்த ஆலோசனைகள் அமுல் செய்யப்பட்டால் இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் வடக்கு – கிழக்கு வளங்களை பயன்படுத்தும் உரிமையை இழந்து விடுவர் என்றார். (இ-3)

## சிரித்திரன் சுந்தர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேலிச் சித்திரம் வரைவதில் ஆற்றல் மிகுந்தவராக விளங்கினார் 'பிளிட்ஸ்' என்ற பிரபல ஆங்கில ஏடுகளில் இவரின் கேலிச்சித்திரங்கள் பிரசுரமாகின இதனைத் தொடர்ந்து தாயகம் திரும்பியதும் 'தினகரன்' பத்திரிகையில் ''சவாரித் தம்பர்'' என்ற பாத்திரப் படைப்பு மூலம் தமிழ் மக்களிடையே மிகவும் பிரபலமானவர்.

சவாரித்தம்பர் கேலிச்சித்திரங்கள் சிரிப்புடன் சிந்தனையை தூண்டும் சமூக நிதர்சன படைப்புக்களாக அமைந்தன. இந்தப் பாத்திரப் படைப்பு தமிழ்மக்களிடையே பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றன.

அறுபதுகளின் நடுப்பகுதியில் சிரித்திரன் எனும் சமூக-இலக்கிய ஏட்டை ஆரம்பித்த அவர், கடந்த 30 வருட காலமாக இந்த ஏட்டை தொடர்ந்து பிரசுரித்து தமிழீழ கலை இலக்கியத் துறையில் சாதனையைப் படைத்துள்ளார் நோய்வாய்ப்பட்ட நிலையிலும் எவ்வளவோ இன்னல்கள் மத்தியில் சிரித்திரனைத் தொடர்ந்து பிரசுரித்து பரந்துபட்ட வாசகர்களின் நன் மதிப்பையும் பெற்றார். சிரித்திரன் மூலம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் கேலிச்சித்திர கலை வடிவத்திற்கு ஓர் முக்கியத்துவத்தை அவர் தேடிக் கொடுத்தார்.

### போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர்

சிவஞானசுந்தரம் அவர்களின் சமூக இலக்கியப் பணியைப் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் (மாமனிதர்) என்ற அதி உயர் விருதை வழங்கி அவரைக் கௌரவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட திரு சுந்தர் போராட்ட வளர்ச்சிக்காகவும் உழைத்தார். சுதந்திர தமிழீழத்தில் எம்மக்கள் சுயகௌரவத்துடன் விடுதலை பெற்று வாழவேண்டுமெனக் கனவு கண்டார். அவரது கலை இலக்கியப் பணியும் விடுதலைக்கான தொண்டும் தமிழீழ தேசத்தால் என்றும் நினைவு கூரப்படும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது மனைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் எமது இயக்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேரர், சோபித தேரர் ஆகியோர் உட்பட பிரபல பௌத்த பிக்குகள் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர்.

அஸ்கிரிய பீடாதிபதி தமது உரையில் தெரிவித்ததாவது:-

இலங்கை கடந்த 2,500 ஆண்டுகளாக ஒருமைப்பாடுள்ள நாடாகவே திகழ்கிறது எனவே ஐக்கிய இலங்கை என்று அரசு கூறுவது தவறு. இலங்கை என்றுமே பிளவுபட்டிருக்கவில்லை.

கூட்டாட்சி முறையை இந்நாட்டில் ஏற்க முடியாது — என்றார்.

வண ராகுல தேரர் பேசுகையில் —

உலகில் உள்ள ஒரேயொரு சிங்கள பௌத்த நாடு இலங்கையே.

அரசின் தீர்வுத்திட்டம் நாடு பிளவுபட வழிகோலும். இந்தத் திட்டம் நாட்டைக் குழப்புமாதலினால் நாம் அதனைப் பூரணமாக நிராகரிக்கிறோம் என்றார்.

வண சோபித தேரர் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை வரலாற்றின் ஓர் முக்கிய கட்டத்தில் தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக தாம் ஒன்று திரண்டிருக்கிறோம்.

இந்நாட்டில் இனப்பிரச்சினை என்றோ தமிழர் பிரச்சினை என்றோ எதுவும் கிடையாது. பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றே இங்கு உண்டு. பிரிவினைவாதப் பிரச்சினையே உண்டு.

அரசின் திட்டங்கள் நாட்டைக் கூறுபோட்டு விடும் — என்றார். (அ-3-6)

## மட்டக்களப்பு திருமலையில் தாக்குதல்

சாவகச்சேரி, மார்ச் 6

மட்டக்களப்பு மாவட்டம் கும்புறுமூலையில் விடுதலைப் புலிகளுக்கும் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதே வேளை நேற்று முன்தினம் நன்பகல் திருமலை மாவட்டம் பள்ளிக் குடியிருப்பில் விடுதலைப்புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. (இ-7)

**2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 06-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org